2018 ஜூன் 8]

சொல்லி, ஆய்வு செய்துவிட்டுச் சென்றார்கள். அந்த இடத்திற்கு இப்பொழுது அரசினுடைய அனுமதி பெறுவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. துணை மின் நிலையத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு விதி 110-ன்கீழ், 132 துணை மின் நிலையங்களை அறிவித்திருக்கின்றார்கள். அதற்குண்டான இடங்கள் கிடைக்கின்றபோது, முன்னுரிமை அடிப்படையிலே அந்தத் துணை மின் நிலையங்கள் அமைத்துத் தரப்படும் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தப் பகுதியை ஆய்வு செய்து கொண்டிருக்கின்றோம். அந்த இடம் கிடைத்தவுடன், பணிகள் தொடங்கப்படும். பொதுவாக, துணை மின் நிலையம் 230 கே.வி.-ஆக இருந்தாலும் சரி, 110 கே.வி.-ஆக இருந்தாலும் சரி, 33/11 கே.வி.-ஆக இருந்தாலும் சரி, 8 மாதத்திலிருந்து 10 மாதத்திற்குள் வேகமாக அந்த வேலைகளை முடிக்கின்ற அளவுக்கு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்தை உடனடியாக ஒப்படைக்க முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டு, இடம் ஒப்படைத்தவுடன், அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

153—

தார்ச் சாலை அமைத்தல்

***3038—திரு. கே. பழனி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், மணிமங்கலம்-நடுவீரன்பட்டு ஒன்றியச் சாலையை தார்ச் சாலையாக அமைக்க அரசு முன்வருமா?

[2018 ஜூன் 8

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், மணிமங்கலம்-நடுவீரன்பட்டு ஒன்றியச் சாலை மொத்தம் 3.50 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையாகும். அதில் 2 கிலோ மீட்டர் நீளச் சாலை ஏற்கெனவே தார்ச் சாலையாக அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய சாலைப் பணிகள் நடப்பாண்டில் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.*

திரு. கே. பழனி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வளர்த்து ஆளாக்கிய இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

இன்றைக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்து, தமிழக மக்களுக்கு தினமும் திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

என்னுடைய ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் மணிமங்கலம்-நடுவீரன்பட்டு சாலை 3.50 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை. அந்தச் சாலையிலே 1½ கிலோ மீட்டர் தூரத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலை 2 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அந்தச் சாலையைச் செப்பனிட்டால், அந்தப் பகுதி மக்களுக்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, அந்தச் சாலையை செப்பனிட்டுத் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

2018 ஜூன் 8]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி, மணிமங்கலம்-நடுவீரன்பட்டு சாலை 3.50 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். இச்சாலை 2017-2018 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் வாயிலாக 0.25 கிலோ மீட்டர் சிமெண்ட் கான்கிரீட் சாலையாகவும், 1.75 கிலோ மீட்டர் சாலை, தார்ச் சாலையாகவும் அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1.50 கிலோ மீட்டர் சாலை நடப்பாண்டில் தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் தார்ச் சாலையாக அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.*

திரு. கே. பழனி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் மலையம்பாக்கம் வழி ரகுநாதபுரம்-மாங்காடு சாலை இரண்டு கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை. அந்தச் சாலை, அதிகமான மக்கள் பயன்பாட்டில் உள்ள சாலை. அந்தச் சாலையை விரைவாகச் செப்பனிட்டுத் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

திரு. செ. ஸ்டாலின் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியம், மதுராபுரி, சிங்களாந்தபுரம் ஆகிய ஊராட்சிகளிலும், நகராட்சியில் 24 வார்டுகளிலும் மண் சாலையை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் மழைக் காலங்களில் மக்கள் சிரமப்படுகின்றனர். எனவே, பொதுமக்கள் நலன் கருதி, இந்தப் பகுதியில் தார்ச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு பொறுப்பேற்றபோது, 1 இலட்சத்து 3 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு இருந்த புறவழிச் சாலைகள் தற்போது, 1 இலட்சத்து 49 ஆயிரம் கிலோ மீட்டர் நீளச் சாலைகளாக அதிகப்படுத்தப்பட்டுள்ளன. இதுபோன்று, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. அதேபோல, இன்றைக்கு நகராட்சிப் பகுதியில் உள்ள 24 வார்டுகளுக்கும் உறுப்பினர் அவர்கள் தார்ச் சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, அங்கு தார்ச் சாலை அமைக்கப்பட வேண்டிய அவசியம் இருந்தால், கண்டிப்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

திருமதி ம. கீதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், எங்கள் மாவட்ட அமைச்சரான மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட உத்திரமங்கலம் பேரூராட்சி, சேங்கல் ரோட்டிலிருந்து லட்சுமணம்பட்டி ஆதி திராவிடர் தெரு வரை உள்ள சாலை தார்ச் சாலையாக அமைத்துத் தரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2018 ஜூன் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளைப் பொறுத்தவரை, தற்போது, நபார்டு வங்கியின் மூலமாகவும் பல சாலைகள் எடுக்கப்பட்டுள்ளன. பேரூராட்சிகளைப் பொறுத்தவரை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 2011-2016 வரை, கிட்டத்தட்ட 4,918 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் 1,376.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலையை, துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, கண்டிப்பாக அதை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. பரமேஸ்வரி அவர்கள். நீங்கள், கேள்வி கேட்கவில்லையா? (குறுக்கீடு) கையைத் தூக்கினீர்கள், சரி.*

வினா வரிசை எண் 154, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

154—

கலைக் கல்லூரி

***4361—திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, கூடங்குளத்தில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*